இங்கிருந்து பிரிக்கவும்

# A

ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 12 ]

Total No. of Printed Pages : 12 ]

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 38 ]

Total No. of Questions : 38 ]

# CCE RR

Question Paper Serial No. **600**

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 85-T**

**Code No. : 85-T**

## ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ

## Subject : SOCIAL SCIENCE (சமூக அறிவியல்)

**( ತಮಿಳು ಮಾಧ್ಯಮ / Tamil Medium )**

**( ಪುನರಾವರ್ತಿತ ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ / Regular Repeater )**

ದಿನಾಂಕ : 30. 06. 2022 ] [ Date : 30. 06. 2022

ಸಮಯ : ಬೆಳಗ್ಗೆ 10-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ–1-45 ರವರೆಗೆ ] [ Time : 10-30 A.M. to 1-45 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 80 ] [ Max. Marks : 80

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**

இங்கு ஓட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 38-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது வலக்கைப் பக்க ஓரத்தை பிரித்து திறக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும் பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. புறவய மற்றும் அகவய வகை வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
4. வலக்கைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணவர்கள் விடைகளை எழுதுவதற்கான அதிகபட்ச நேரம் வினாத்தாளின் மேற்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக ஒதுக்கப்பட்ட 15 நிமிடங்களையும் அது உள்ளடக்கியது.

**Tear here**

**I.** **பின்வரும் வினாக்கள்/மற்றும் முழுமைப்பெறாத கூற்றுகளுக்கு *நான்கு* மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும் :** **8 × 1 = 8**

1. முதல் ஆங்கில மராத்தா போருக்குப்பின் பேஷ்வா பதவிக்கு உயர்த்தப்பட்டவர்

   (A) நாராயணராவ்

   (B) இரண்டாம் மாதவ ராவ்

   (C) நானா பட்நாவிஸ்

   (D) ரகுநாத் ராவ்.

2. வடிகால் கொள்கையை பற்றி எடுத்துரைத்தவர்

   (A) தாதாபாய் நௌரோஜி

   (B) மகாத்மா காந்தியடிகள்

   (C) A.O. ஹியூம்

   (D) பாலகங்காதர திலகர்

3. தன்னுடைய வெளியுறவுக் கொள்கையில் அணிசேராக் கொள்கையை கடைப்பிடிக்கும் நாடு

(A) அமெரிக்கா

(B) ரஷ்யா

(C) சீனா

(D) இந்தியா

4. ஆனைமலை வன உயிரின சரணாலயம் அமைந்துள்ள மாநிலம்

(A) கர்நாடகம்

(B) கேரளம்

(C) தமிழ்நாடு

(D) தெலுங்கானா

5. ஓர் ஆண்டு காலத்தில் நாட்டில் உற்பத்தியான அனைத்து சரக்கு மற்றும் சேவைகளின் மொத்த மதிப்பு இவ்வாறு அழைக்கப்படுகிறது.

(A) தனிநபர் வருமானம்

(B) முன்னேற்ற வளர்ச்சி

(C) தேசிய வருமானம்

(D) மனித வளர்ச்சி குறியீடு

6. இந்தியாவில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு

(A) 1962

(B) 1968

(C) 1976

(D) 1986

7. பின்வருவனவற்றுள் எது பெண்களின் மிக முக்கியமான போராட்ட இயக்கம் ஆகும்.

(A) மதுவிலக்கு இயக்கம்

(B) தீண்டாமை தடுப்பு இயக்கம்

(C) தொழிலாளர் இயக்கம்

(D) விவசாயிகளின் இயக்கம்

8. பின்வருவனவற்றுள் ஊதியமற்ற வேலைக்கு சிறந்த எடுத்துக்காட்டு.

(A) சாலையோர வாணிகம்

(B) தன் சுய மனநிறைவுக்காக ஓவியம் தீட்டுதல்

(C) தொழிற்சாலைகளில் வேலை செய்தல்

(D) ஆசிரியராக பள்ளியில் பணிபுரிதல்

**II. பின்வரும் வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளிக்கவும் : 8 × 1 = 8**

9. உலக நுகர்வோர் தின வரலாற்றில் மார்ச் 15, 1962ம் நாள் ஏன் ஒரு முக்கியமான நாளாக கருதப்படுகிறது ?

10. வெப்ப மண்டல இலையுதிர் காடுகள் ஏன் ''பருவக்காற்று காடுகள்'' எனவும் அழைக்கப்படுகின்றன ?

11. சிப்கோ இயக்கத்தின் ஒரு முக்கியமான விளைவு என்ன ?

12. இந்தியாவில் கோடை காலத்தில் வெப்பநிலை அதிகரிக்க காரணம் என்ன?

13. துணைப்படைத்திட்டத்தை கொண்டு வந்தவர் யார்?

14. இரண்டாம் ஆங்கில மைசூர்ப் போர் எந்த உடன்படிக்கையில் முடிவுற்றது?

15. இந்தியாவின் எந்த அண்டை நாடு 1962-ல் இந்தியாவின் மீது போர் தொடுத்தது?

16. ''கிராமங்களின் வளர்ச்சியே இந்தியாவின் உண்மையான வளர்ச்சி'' எனக் கூறியவர் யார்?

**III. பின்வரும் வினாக்களுக்கு இரண்டிலிருந்து நான்கு வாக்கியங்கள் வரை விடையளிக்கவும் :** **8 × 2 = 16**

17. பக்சார் போரினால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?

18. கோவா எவ்வாறு 1961-ல் போர்த்துகீசியரிடமிருந்து விடுதலைப் பெற்றது?

19. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை ஏற்படுத்த காரணிகளாக அமைந்த அம்சங்கள் யாவை ?

*அல்லது*

இரண்டாம் உலகப்போருக்குப்பின் ஏற்பட்ட தலையாய பிரச்சனைகள் யாவை ?

20. முறைப்படுத்தப்படாத பணியாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் யாவை ?

*அல்லது*

முக்கியமான சுற்றுச்சூழல் இயக்கங்களை பட்டியலிடுக.

21. இந்தியாவின் நான்கு இயற்கை அமைப்பு பிரிவுகள் யாவை ?

22. மண்ணரிப்புக்கான காரணங்கள் யாவை ?

23. பொருளாதார வளர்ச்சியின் நோக்கங்கள் யாவை ?

24. பல்வேறு வகையான வங்கி கணக்கு முறைகள் யாவை ?

**IV. பின்வரும் வினாக்களுக்கு ஆறு வாக்கியங்களில் விடையளிக்கவும் :**

**9 × 3 = 27**

25. ஆங்கில கல்வி முறையால் இந்தியர்கள் மேல் ஏற்பட்ட விளைவுகள் யாவை?

*அல்லது*

சங்கொள்ளி ராயண்ணா எவ்வாறு ஆங்கிலேயருடன் போரிட்டார்?

26. ஆரிய சமாஜத்தின் நோக்கங்கள் யாவை?

27. 1857 ல் நடைபெற்ற பெரும்புரட்சியின் தோல்விக்கான காரணங்களை விவரி.

28. இந்தியா ரஷ்யா மீது கொண்டுள்ள நல்உறவைப் பற்றி விவரி.

29. தீண்டாமையை அடியோடு ஒழிக்க விடுதலை இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

30. ஓரிடத்தில் தொழிற்சாலை அமைக்கத் தேவையான காரணிகள் யாவை?

*அல்லது*

ஒரு நாட்டின் வளர்ச்சியில் போக்குவரத்து துறையின் முக்கியத்துவம் குறித்து விவரி.

31. வெள்ளங்களால் ஏற்படும் விளைவுகள் யாவை?

32. உற்பத்தி செயல்பாட்டு தேவைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் காரணிகள் யாவை?

*அல்லது*

பஞ்சாயத்து ராஜ் அமைப்பின் முக்கிய குண இயல்புகள் யாவை?

33. வங்கியின் செயல்பாடுகள் குறித்து விவரி.

*அல்லது*

தொழில் முனைவோரின் தன்மைகள் ( குண இயல்புகள் ) யாவை?

**V. பின்வரும் வினாக்களுக்கு எட்டு வாக்கியங்களில் விடையளிக்கவும் :**

**4 × 4 = 16**

34. இந்திய விடுதலைப் போராட்டத்தில் சுபாஷ் சந்திரபோஸ் ஆற்றிய அரும்பங்கினை விவரி.

35. இந்தியாவின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் பல்வேறு பழங்குடியினர் நடத்திய புரட்சிகள் குறித்து விவரி.

*அல்லது*

இந்திய தேசிய இயக்கத்தில் விடுதலைக்காக தீவிரவாதிகள் ஆற்றிய அரும்பங்கினை விவரி.

36. இந்தியாவில் பெண்களின் நிலை உயர இந்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

37. இந்தியாவில் நடைமுறையில் உள்ள பல்வகை வேளாண் (விவசாய) முறைகள் யாவை?

**VI. 38.** **இந்திய தரைப்படம் வரைந்து பின்வருமிடங்களை குறிக்கவும் :** **1 + 4 = 5**

a) $82\frac{1}{2}^{\circ}$ கிழக்கு தீர்க ரேகை

b) நர்மதை ஆறு

c) புதிய மங்களூரு துறைமுகம்

d) பக்ரா-நங்கல் அணைத்திட்டம்.

*பார்வைத் திறன் அற்றோர்க்கான வினா :* **(வினா எண் 38 க்கான மாற்று வினா)** **5**

பல்நோக்கு ஆற்று பள்ளத்தாக்கு அணைக்கட்டு திட்டங்களின் நோக்கங்கள் யாவை ?